


திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, முகையூர் ஊராட்சி ஒன்றியம், முகையூர் ஊராட்சியில் குளம் மேம்பாடு செய்தல் பணி திறப்பு விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் மாவட்ட துணை ஆட்சியர் ஜெ.இ.பத்மஜா, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் டி.என். முருகன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், எஸ். லூயிஸ், ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், மாவட்ட கவுன்சிலர் ராஜீவ்காந்தி, மற்றும் பலர் உடனிருந்தனர்.



புதுச்சேரி, வில்லியனூரில் ரூ. 7.40 கோடி மதிப்பீட்டில் குளிரூட்டும் வசதியுடன் கூடிய கஸ்தூரிபாய் காந்தி திருமண மண்டபம் கட்டுமானப் பணிக்கு முதல்வர் ரங்கசாமி அடிக்கல் நாட்டினார். உடன் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா உள்ளிட்டோர் உள்ளனர்.

### தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# திண்டுக்கல்லில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் –அமைச்சர் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில்குமார் அறிக்கை!

திண்டுக்கல்,பிப்.12 - திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர்அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறகக்கணிக்க ப் பட்டுள்ளதற்கு எதிராகவும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க. வையும் கண்டித்து தமிழ்நாட்டின் அனைத்து மாநகரங்களில் தலா ஒரு இடத்திலும் மற்றும் ஒன்றியம், நகரம் அளவில் ஒரு இடத்திலும் இன்று ( பிப்ர வரி 12ஆம் தேதி) மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் 'மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்" நடைபெறும்.

திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கீழ்க் கண்ட இடங்களில் இன்று ( 12.02.2026 ) மாலை 4.00 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டங்களை திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, நகர, ஒன்றிய, பகுதி கழகச் செயலாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்து அந்தந்த





பகுதியிலுள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்களையும் கலந்துகொள்ளச் செய்வதோடு கழகத்திற்குட்பட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள், கழக முன்னோடிகள் என அனைவரையும் கலந்துகொள்ளச் செய்து இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தினை வெற்றி பெறச் செய்ய வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்**

**வ. எண். ஒன்றியம் / நகரம் / பகுதி/ பேரூர் இடம்**

**ஆகியவை வருமாறு:**

ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி

1 ஆத்தூர் கிழக்கு, மேற்கு, தெற்கு ஒன்றியங்கள், அய்யம்பாளையம், சித்தையன்கோட்டை, சின்னாளபட்டி பேரூர்கள் -பித்தளைப்பட்டி பிரிவு

2 ரெட்டியார்சத்திரம் வடக்கு, மேற்கு, தெற்கு ஒன்றியங்கள், கன்னிவாடி, ஸ்ரீராமபுரம், அகரம், தாடிக்கொம்பு பேரூர்கள் - ரெட்டியார்சத்திரம்

**பழனி சட்டமன்றத் தொகுதி**

1 பழனி நகரம் மற்றும் பழனி கிழக்கு ஒன்றியம், ஆயக்குடி பேரூர் பழனி, மயில் ரவுண்டானா

2 பழனி மேற்கு, வடக்கு ஒன்றியங்கள், பாலசமுத்திரம், நெய்க்காரப்பட்டி பேரூர் அ.கலையாம் புத்தூர்

3 கொடைக்கானல் நகரம் மற்றும் கொடைக்கானல் மத்திய ஒன்றியம்முஞ்சிக்கல், கொடைக்கானல்.

4 கொடைக்கானல் மேல்மலை ஒன்றியம். பூண்டி

5கொடைக்கானல் கீழ் மலை வடக்கு, தெற்கு ஒன்றியங்கள், பண்ணைக்காடு பேரூர் கே.சி.பட்டி

**நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி**

1 வத்தலக்குண்டு வடக்கு, தெற்கு, கிழக்கு ஒன்றியங்கள், வத்தலக்குண்டு, சேவுகம்பட்டி, பட்டிவீரன்பட்டி பேரூர்கள், வத்தலக்குண்டு, காளியம்மன் கோவில் அருகில்

2 நிலக்கோட்டை தெற்கு, மேற்கு, வடக்கு ஒன்றியங்கள், நிலக்கோட்டை, அம்மையநாயக்கனூர் பேரூர்கள், நிலக்கோட்டை, பஸ்ஸ்டாண்டு அருகில்.

**திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி**

1 திண்டுக்கல் மாநகரம் நாகல்நகர், தண்ணீர் தொட்டி அருகில்

2 திண்டுக்கல் கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கு ஒன்றியங்கள் திண்டுக்கல், பழனி ரோடு, கிரீன் பார்க் ஹோட்டல் அருகில்

**திண்டுக்கல் மேற்கு மாவட்டம்**

**வ. எண். ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் இடம்**

**வருமாறு:**

**ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி**

1 தொப்பம்பட்டி மேற்கு, வடக்கு, மத்திய ஒன்றியங்கள், கீரனூர் பேரூர் தொப்பம்பட்டி

2 ஒட்டன்சத்திரம் நகரம், ஒட்டன்சத்திரம் வடக்கு, மேற்கு, மத்திய ஒன்றியங்கள் ஒட்டன் சத்திரம்

**வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி**

1 வேடசந்தூர் வடக்கு, தெற்கு ஒன்றியம், வேடசந்தூர், எரியோடு பேரூர் எரியோடு

2 குஜிலியம்பாறை வடக்கு, தெற்கு ஒன்றியங்கள், பாளையம் பேரூர் குஜிலியம்பாறை

3 வடமதுரை மேற்கு, கிழக்கு ஒன்றியங்கள், வடமதுரை, அய்யலூர் பேரூர்கள் வடமதுரை

**நத்தம் சட்டமன்றத் தொகுதி**

1 நத்தம் வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றியங்கள், நத்தம் பேரூர் நத்தம்

2 சாணார்பட்டி வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றியங்கள் கோபால்பட்டி

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து


# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!

செஞ்சி, பிப். 12 - ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் இதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்நடைபெறுகிறது.

இதுகுறித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கூறுகையில்:

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்க ப் பட்டுள்ளதற்கு எதிராகவும் 100 நாள் வேலையை



ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்துதமிழ்நாட்டு வளர்ச்சியை தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து இன்று (பிப்ரவரி 12ஆம் தேதி வியாழக் கிழமை) மாலை 4.00மணியளவில் மதச்சார்பற்ற முற்போர்க்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் உள்ள ஒன்றிய,நகர பேரூர் அளவில் நடைபெறும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் அந்தந்த பகுதிகளில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திரளாக கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பாஜகஅரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு..கவை கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டும்என விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# தேனி வடக்கு மாவட்டத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. அறிவிப்பு!

தேனி, பிப். 12 – ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.கவையும் துணை போகும் அ.தி.மு.க. வையும் கண்டித்து தேனி வடக்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர் தங்கதமிழ் செல்வன் எம்.பி. அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ஒன்றிய அரசு பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டு ள்ளதற்கு இன்று (12.02.2026 வியாழக்கிழமை) மாலை 04.00 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் 'மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க. வையும் கண்டித்து தேனி வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கழக ஒன்றிய, நகர அளவில் இன்று (12.02.2026 வியாழக்கிழமை )மாலை 04:00 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் 'மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கீழ்க் கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெறும்.

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

ஒன்றியம் / நகரம் / இடம்

சின்னமனூர் ஒன்றியம் , சங்கராபுரம் பஸ் நிறுத்தம் அருகில்

போடிநாயக்கனூர் மேற்கு / கிழக்கு ஒன்றியம் , மேலச்சொக்கநாதபுரம் நாடகமேடை அருகில்

போடிநாயக்கனூர் நகரம், தேவர் சிலை அருகில்

தேனி வடக்கு /தெற்கு ஒன்றியம், வீரபாண்டி குமார் ஹோட்டல் அருகில்

தேனி தெற்கு/வடக்கு நகரம், ஸ்டேட் பேங்க் எதிரில் தேனி

பெரியகுளம் நகரம், தபால் தந்தி அலுவலகம் எதிரில்

பெரியகுளம் வடக்கு/தெற்கு ஒன்றியம், வடுகப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில்

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருடன் இணைந்து மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள்



அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் அந்தந்த ஒன்றியம், நகரங்களில் கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க. வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# நெல்லைகிழக்குமாவட்டமதச்சார்பற்றமுற்போக்குக்கூட்டணிசார்பில்ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிக்கை!

நெல்லை, பிப்.12 – முதலமைச்சர் கழக தலைவர் தளபதியார் அவர்கள் ஆணைக்கிணங்க துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி கழக துணை பொதுச்செயலாளர்,தி.மு.க நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களின் வழிகாட்டுதலின் படி நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியை தடுத்து வரும் பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வை யும் கண்டித்து இன்று (12.2.2026) மாலை 4 மணிக்கு கீழ்க்கண்ட இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

எனவே அந்தந்த பகுதிகளில் உள்ள மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,BLA 2, BDA, BLC மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இராதாபுரம் ஒன்றியம் இராதாபுரம் கிழக்கு திசையன்விளை இராதாபுரம் கிழக்கு,மேற்கு,தெற்கு, பேரூர்,கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகா ம்பெல் தலைமையில்



நடை பெறுகிறது. இதில் தொகுதி பார்வையாளர் சிவராஜ்,ஒன்றிய செயலாளர்கள் ஜெகதீஷ்,ஜோசப் பெல்சி,ஒன்றிய பொறுப்பாளர் எரிக்ஜுடு,பேரூர் செயலாளர் ஜான் கென்னடி ஆகியோர் முன்னிலை. வள்ளியூர் ஒன்றியம் வடக்கு, தெற்கு, பணகுடி பேரூர் தலைமை செயற்குழு உறுப்பினர் சா.ஞானதிரவியம் தலைமையில் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு தெற்கு ஒன்றிய செயலாளர் சேவியர் செல்வராஜா,பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன் ஆகியோர் முன்னிலை நடைபெறுகிறது.களக்காடு ஒன்றியம்

வள்ளியூர் பேரூர்,களக்காடு நகரம், தெற்கு,வடக்கு,ஏர்வாடி பேரூர் திருக்குறுங்குடி பேரூர்,மாவட்ட பொறுப்புகுழு உறுப்பினர் ஜார்ஜ் கோசல் தலைமையில் பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம் நகரச் செயலாளர் மணி சூரியன்,தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜன்,வடக்கு ஒன்றிய செயலாளர் செல்வக் கருணாநிதி,ஏர்வாடி பேரூர் செயலாளர் அயூப்கான், திருக்கருங்குடி பேரூர் செய லாளர் கசமுத்து ஆகியோர் முன்னிலை நடைபெறுகிறது.நாங்குநேரி ஒன்றியம் நாங்குநேரி மேற்கு, கிழக்கு, பேரூர், மூலக்கரைப்பட்டி பேரூர், நாங்குநேரி தொகுதி பார்வையாளர் சுரேஷ் ராஜன் தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் சுடலை கண்ணு, ஆரோக்கிய எட்வின், பேரூர் செயலாளர் வானுமாமலை,முருகையா ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. பாளை ஒன்றியம் பாளை மத்திய, வடக்கு, தெற்கு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக் தலைமையில்

ஒன்றிய செயலாளர் போர்வெல் கணேசன்,ஒன்றிய பொறுப்பாளர்கள் கண்ணன்,சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியை ஏற்று, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில், ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றிய அ.தி.மு.க பொருளாளர் மூர்த்தி தனது ஆதரவாளர்கள் 500க்கும் மேற்பட்டோருடன் தங்களை நமது திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டார். புதிதாக கழகத்தில் இணைந்த அனைவருக்கும் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கழக இரு வண்ண வேஷ்டிகள் மற்றும் புடவைகள் அணிவித்து அன்புடன் வரவேற்று தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மாங்காடு எம்.வி. சோலையப்பன்

### பிப்ரவரி 12 (1972)



கழகம் துவக்கிய காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்று, காங்கிரஸ் ஆட்சியில் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகி தமது பகுதியில் கழகம் வளர்த்த தளகர்த்தர்களில் ஒருவர்.

தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பையும் பெற்றவர்.

மாங்காடு பேரூராட்சி தலைவராகவும் – குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். கழகத்தின் முதல் ஒன்றியப் பெருந்தலைவர் என்ற சிறப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். தன் இறுதிகாலம் வரை கழகத்திற்காக பாடுபட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**